இருந்தால், அதனால் போலீஸ் துறை முழுவதும் அப்படிப்பட்டது என்று நாம் தீர்மானித்து விடக்கூடாது. குற்றம் செய்த மனிதர்களில் ஒரு மனிதன் போலீஸில் இருந்தான் என்ற முறையிலேதான் இதை எடுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல், போலீஸ் துறையே இப்படிப்பட்டது என்ற முடிவுக்கு தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் வரக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்தக் குடும்பத்திற்கு இந்த அளவில் உதவி செய்யப்பட்டிருக்கிறது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலமாக விசாரித்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

(அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆறு பேரை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தங்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவையின் அலுவல்கள் நடைபெறாது இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக அவையில் குந்தகம் செய்து வருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121 உள் விதி (2)-ன்கீழ், இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திருவாளர்கள் வே. செந்தில் பாலாஜி, கோ. அரி, செ.ம. வேலுசாமி, டி. ஜெயக்குமார், வி.பி. கலைராஜன் மற்றும் எல். ரவிச்சந்திரன் ஆகியோரை 12-5-2010, 13-5-2010 ஆகிய இரண்டு நாட்கள் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கம் செய்ய வேண்டும்"

என்னும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

2010 மே 12] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 11-20

அவையின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு செய்தும், அவையின் கண்ணியத்தையும், மரபையும் மீறி, அவைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில் நடந்துகொண்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. கோ. அரி, திரு. செ.ம. வேலுசாமி, திரு. டி. ஜெயக்குமார், திரு. வி.பி. கலைராஜன், திரு. எல். ரவிச்சந்திரன், ஆகியோர் 12-5-2010 மற்றும் 13-5-2010 ஆகிய இரண்டு நாட்களுக்கு பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்படுகிறார்கள்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) பாரத் எரிவாயு நிறுவனம், எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும்போது மளிகைப் பொருட்களையும் வாங்குமாறு வற்புறுத்துவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Bharath Gas Agency நிறுவனம் ரூ.100/-க்கு மளிகைப் பொருட்களை வாங்கினால்தான் சமையல் எரிவாயு சிலிண்டர் சப்ளை செய்யப்படுமென்று வாடிக்கையாளர்களை வற்புறுத்துவது குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர் விதி 56 மற்றும் 55-இன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளனர். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களான பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஆகிய 3 நிறுவனங்கள் நம்முடைய தமிழகத்திலே வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயுவை நாடு முழுவதும் சப்ளை செய்வதற்கான Dealership-ஐ பல